தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அனைத்து மாணவர்களுக்கும் சட்டக் கல்வி அவசியம் - மூத்த நீதிபதி அறிவுரை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழுவால் 15-9-2014 அன்று சட்ட கல்வி அறிவு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. சுமார் 300 நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இரண்டாமாண்டு இளமறிவியல் வேளாண்மை மாணவி செல்வி. ரேஷ்மா வரவேற்றார். வேளாண் பல்கலை துணைவேந்தர் திரு. கு. இராமசாமி அவர்கள் தம் தலைமை உரையில் இந்தியா அதிகமாக இளைஞர்களைக் கொண்ட நாடாக இருப்பதால் மிகவும் சிறப்பு வாய்ந்தது. எனவே இளைஞர்கள் நாட்டின் சட்ட திட்டங்களையும், அடிப்படை உரிமை, ஜனநாயக மரபு ஆகியவற்றைத் தெரிந்து வைத்திருத்தல் அவசியம் என்று கூறினார். பல்கலைக்கழக மானியக்குழு அனைத்து கல்லூரிகளிலும் சட்டக் கல்வி பயில்விக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான வரைமுறைகளை தயாரித்திருப்பதாகவும் கூறினார். திரு. ஜகந்நாதன், மூத்த உரிமையியல் நீதிபதி மற்றும் செயலாளர் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழு அவர்கள் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நீதித் துறையின் செயல்பாடு குறித்தும், பிறப்பு இறப்பு பதிவு சட்டம், வாகன விபத்து தடுப்பு சட்டம், பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம், சொத்துரிமைச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், தற்கொலைக்குத் தூண்டுதல், வேகமாக வாகனம் இயக்கி விபத்து ஏற்படுத்துதல் ஆகியவை குறித்த சட்டங்கள், சாட்சியங்கள், முதல் தகவல் அறிக்கை, ஆகியவை குறித்து மாணவர்களுக்கு விளக்கினார். மாணவர்கள் கலந்துரையாடலில் பங்கு பெற்று தங்கள் சந்தேகங்களை தீர்த்துக் கொண்டனர்.

முனைவர். ச. மகிமைராஜா, முதன்மையர் (வேளாண்மை), முனைவர் ந. ரகுபதி, இயக்குநர் (மாணவர் நலம்) மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் முனைவர் வெங்கிட பிரபு ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாட்டை முனைவர் கிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் குமுதா, திட்ட அலுவலர்கள் முனைவர் லதா, ஹேமாபிரபா, பாவேந்தன், குரு மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் திரு. பாலமுருகன், சந்தானகிருஷ்ணன், பாரதி ஆகியோர் செய்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்